# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2028/16 - 2017 ජූලි මස 19 වැනි බදාදා - 2017.07.19

*2028/16 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச.வ.பீ. 6/77* (ii)

***1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், தவறுகளைத் தடுப்பதிலும் அத்தகைய தவறுகள் தொடர்பில் தண்டனைகளை விதிப்பதிலும் பொருத்தனையொன்று குற்றவழக்குக்கு அமைந்தவராகவுள்ள ஆட்களையும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆட்களையும் கைமாற்றிக் கொள்வதை ஆளுகின்ற இருதரப்பு சட்டப்பொறிமுறையொன்றைத் தாபிப்பதற்கெனவும், பொருத்தனையின் அரச திறத்தவர்களுக்கிடையில் ஒத்துழைப்பை மேம்படுத்தக்கூடியவாறு நீதியின் வினைத்திறனை முன்னேற்றுவதற்கெனவும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் வெளிநாட்டு அரசொன்றான வியட்நாம் சோசலிசக் குடியரசுக்கும் இடையே 2014, ஏப்பிறல் 07 ஆந் திகதியன்று கொழும்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளபடியினாலும், பொருத்தனைக்கான திறத்தவர்கள், குற்றவழக்குத் தொடுப்பதற்காக அல்லது தண்டனைத் தீர்ப்புகளை நிறைவேற்றுவதற்காகத் தோதான அரச திறத்தவர்களின் ஆட்புல எல்லைகளினுள் கண்டுபிடிக்கப்படும் ஆட்களை வேண்டுகோள் விடுக்கப்பட்டதன்மேல், அத்துடன் பொருத்தனைகளின் ஏற்பாடுகளுக்கமைவாக, அவற்றுக்கிடையே மீள ஒப்படைப்பதற்குப் பொறுப்பேற்கின்றனரெனவும் ; அத்துடன் அத்தகைய பொருத்தனைகளின் ஏற்பாடுகள் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இசைவாகவுள்ளனவெனவும், சொல்லப்பட்ட 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க சட்டத்தின் ஏற்பாடுகள், பொருத்தனையில் குறித்துரைக்கப்பட்டவாறாக அத்தகைய திரிபு, வரையறை அல்லது நிபந்தனைக்கு அமைவாக, அத்தகைய வெளிநாட்டு அரசு தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டுமெனவும் இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

*சனாதிபதி.*

*கொழும்பு,*
*2017, யூலை 18.*

*08- 144*


1A - PG 3617 — 437 (2017/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.